**மறைமலைநகர் நகராட்சியில் 06.02.2018 செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்ற நகர் மன்ற சாதாரணக் கூட்டத்தின் தீர்மான விவரம்.**

| பொருள் எண் | தீர்மான எண் | நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரம் |
|---|---|---|
| 1 | 254 | அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது. |
| 2 | 255 | அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது. |
| 3 | 256 | அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது. |
| 4 | 257 | அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது. |
| 5 | 258 | அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது. |

# மறைமலைநகர் நகராட்சி

**மறைமலைநகர் நகராட்சியில் 06.02.2018 செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்ற நகர் மன்ற சாதாரணக் கூட்டத்தின் தீர்மான விவரம்.**

## பொருள் எண்.1

மறைமலைநகர் நகராட்சி வார்டு எண்.3 காந்தி நகர் பிரதான சாலையில் புதியதாக கட்டப்பட்டுள்ள பூங்காவிற்கு ''**மாண்புமிகு புரட்சி தலைவி அம்மா பூங்கா**'' என பெயர் வைக்க திரு.எஸ்.ஆறுமுகம் மற்றும் திரு.ஆர்.தசரதன் முன்னாள் நகரமன்ற உறுப்பினர் ஆகியோர் வழங்கியுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

வார்டு எண்.3 காந்தி நகர் பிரதான சாலையில் அமைந்துள்ள பூங்காவிற்கு ''**மாண்புமிகு புரட்சி தலைவி அம்மா பூங்கா**'' என பெயரினை மன்றம் தீர்மானிக்கிறது.

**நகரமன்ற தீர்மான எண்.254 நாள்.06.02.2018**
**அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.**

**ஓம்/—ப.மு.நெ.முஜிபுர் ரஹ்மான்**
**ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்**
**மறைமலைநகர் நகராட்சி**

**//உண்மை நகல்//**

**மேலாளர்**
**மறைமலைநகர் நகராட்சி**

# மறைமலைநகர் நகராட்சி

**மறைமலைநகர் நகராட்சியில் 06.02.2018 செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்ற நகர் மன்ற சாதாரணக் கூட்டத்தின் தீர்மான விவரம்.**

**பொருள் எண்.2**

தமிழ்நாடு மறுவரையறை ஆணைய கடித Delimitation Order No.1/2017/tndc/eg1 நாள்.12.09.2017–ன்படி காஞ்சிபுரம் மாவட்டத்தில், நகராட்சி வார்டுகள் மறுவரையறை செய்யப்பட்டு, வரைவு வார்டு எல்லை மறுவரையறை கருத்துருக்கள் 27.12.2017 அன்று மறைமலைநகர் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளில் பொதுமக்களின் பார்வைக்காக வெளியிடப்பட்டது.

27.12.2017 முதல் 12.01.2018 வரை பொது மக்கள் / அரசியல் கட்சி பிரதிநிதிகளிடமிருந்து கருத்துக்கள் / ஆட்சேபணை மனுக்கள் பெறப்பட்டன. மேலும், ஆணையர் தமிழ்நாடு மறுவரையறை ஆணையம் அவர்களின் தலைமையில் 24.01.2018 அன்று காஞ்சிபுரம் மாவட்டம் மறைமலைநகர் நகராட்சி மன்ற கூட்ட அரங்கில் நடைபெற்ற மண்டல அளவிலான கருத்துக்கேட்பு கூட்டத்தின்போது மனுதாரர்களின் கருத்தறியப்பட்டது. இதன்படி, தயார் செய்யப்பட்ட இறுதி வரைவு வார்டு எல்லை மறுவரையறை கருத்துருக்கள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

<u>நகராட்சி வார்டு</u>

| S.No | Type of Urban Local Body | Annexure | Details of Form |
|---|---|---|---|
| 1 | Municipality | I (d) | Data of Final Draft ward Delimitation Proposal |
| 2 | | II (d) | Final Draft ward Delimitation Report |
| 3 | | III (a) | Certificate by Delimitation Authority |
| 4 | | IV (d) | Consolidated Delimitation Proposal for Municipal ward |
| 5 | | | Ward Wise Map |

**அலுவலக குறிப்பு : -**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகரமன்ற தீர்மான எண்.255 நாள்.06.02.2018**
**அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.**

**ஒம்/–ப.மு.நெ.முஜிபுர் ரஹ்மான்**
**ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்**
**மறைமலைநகர் நகராட்சி**

**//உண்மை நகல்//**

**ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்**
**மறைமலைநகர் நகராட்சி**

# மறைமலைநகர் நகராட்சி

**மறைமலைநகர் நகராட்சியில் 06.02.2018 செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்ற நகர் மன்ற சாதாரணக் கூட்டத்தின் தீர்மான விவரம்.**

## பொருள் எண்.3

மறைமலைநகர் நகராட்சி 58.08 சதுர கி.மீ பரப்பளவுடன் 21 வார்டுகள் கொண்ட சிறப்பு நிலை நகராட்சியாகும். இந்நகராட்சியின் மக்கள் தொகை 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 81361 ஆகும்.

வார்டு எண்.3,4,5,6,7,8 மற்றும் தொழிற்பேட்டை பகுதியில் பாலாறு கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் நாள் ஒன்றுக்கு 2.50 எம்.எல்.டி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் நந்திவரம் கூடுவாஞ்சேரி கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் வார்டு எண்.13,14,17,18,19,20,21 பகுதிக்கு தெரு குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் வாயிலாக 3.00 எம்.எல்.டி மற்றும் உள்ளூர் நீராதாரம் கிணறுகள், ஆழ்துளை கிணறு வாயிலாக 4.30 எம்.எல்.டி என மொத்தம் 7.30 எம்.எல்.டி குடிநீர் நபர் ஒருவருக்கு 90 எல்.பி.சி.டி வீதம் வழங்கப்பட்டு வருகிறது.

இந்நகராட்சி பகுதியில் தொழிற்சாலைகள் அதிகம் உள்ளதால், குடியிருப்பு பகுதியிலுள்ள பொதுமக்களுக்கு தரமான குடிநீர் விநியோகிக்கும் பொருட்டு 152 எண்ணிக்கையிலான குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. எனினும் மேற்படி குடிநீர் மையங்களை பராமரிப்பு மேற்கொள்வதிலும், Membrane மாற்றம் செய்யவும் உபகரணங்கள் மாற்றவும் அதிக அளவில் தொகை செலவிட வேண்டிய நிலை உள்ளது.

மறைமலைநகர் நகராட்சி எல்லையொட்டி அமைந்துள்ள சிங்கபெருமாள் கோயில் ஊராட்சி பகுதியில் தனியார் பங்களிப்பு மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோக மையங்கள் அமைத்து குறைந்த விலையில் பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதன் அடிப்படையில் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளிலும் இதே போன்று தனியார் பங்களிப்பின் கீழ் (Public Private Partnership mode) பாதுகாக்கப்பட்ட குடிநீர் மையங்கள் ஏற்படுத்தவும், பொது மக்களுக்கு குறைந்த விலையில் மேற்படி குடிநீர் விநியோகம் செய்யவும், மேற்படி விற்பனை விலையில் நகராட்சிக்கும் ஒரு பங்கு பெற்று சிறு வருவாய் ஈட்டவும் தக்க வகையில் அப்பணியை செய்ய ஆர்வம் உள்ள நிறுவனங்களை தேர்வு செய்ய உரிய ஒப்பந்தப்புள்ளி (Expression of Interest) கோரி உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கும் அனுமதிக்கலாம்.

**நகரமன்ற தீர்மான எண்.256        நாள்.06.02.2018**
**அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.**

**ஒம்/—ப.மு.நெ.முஜிபுர் ரஹ்மான்**
**ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்**
**மறைமலைநகர் நகராட்சி**

**//உண்மை நகல்//**

**மேலாளர்**
**மறைமலைநகர் நகராட்சி**

# மறைமலைநகர் நகராட்சி

**மறைமலைநகர் நகராட்சியில் 06.02.2018 செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்ற நகர் மன்ற சாதாரணக் கூட்டத்தின் தீர்மான விவரம்.**

## பொருள் எண்.4

மறைமலைநகர் நகராட்சி பகுதியில் கார்பரேட் நிறுவனங்களின் சமூக கூட்டாண்மை பொறுப்பு நிதி (CSR Fund) பெற்று குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து பராமரிப்பு பணி மேற்கொள்ள விருப்பம் உள்ள நிறுவனங்களிடமிருந்து 06.02.2018–ல் கருத்துரு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்ட நிலையில் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | விவரம் | M/s. Water Life India | M/s. TGV Engineers |
|---|---|---|---|
| 1 | இட வசதி | 900 ச.அடி | 900 ச.அடி |
| 2 | குடிநீர் இணைப்பு | ஆழ்துளை கிணறு மற்றும் கிணறு | ஆழ்துளை கிணறு மற்றும் கிணறு |
| 3 | மின்சார இணைப்பு | மும்முணை | மும்முணை |
| 4 | முன் அனுபவம் | உள்ளது | இல்லை |
| 5 | நிதி ஆதாரம் | கார்பிரேட் நிறுவனம் மற்றும் தொண்டு நிறவனங்களின் மூலம் நிதி பெற்று நிலையம் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது | நகராட்சியிலிருந்து நிதி வழங்க கோரப்பட்டுள்ளது |
| 6 | பொது மக்களுக்கு குடிநீர் 20லிட்டர் கேன் ஒன்றுக்கான விலை | கேன் ஒன்றுக்கு ரூ.7 | கேன் ஒன்றுக்கு ரூ.10 |
| 7 | நகராட்சிக்கு செலுத்தும் வளர்ச்சி நிதி | கேன் ஒன்றுக்கு ரூ.1 | கேன் ஒன்றுக்கு ரூ.1 |

மேற்கண்ட இரண்டு நிறுவனங்களில் M/s. Water Life India என்ற நிறுவனத்திற்கு போதிய முன் அனுபவம் உள்ளது. மேலும், இந்நிறுவனத்தால் அமைக்கப்பட்ட குடிநீர் சுத்திகரிப்பி நிலையங்கள் சிங்கபெருமாள் கோயில் மற்றும் வீராபுரம் பகுதியில் கடந்த மூன்று ஆண்டுகளாக நல்ல முறையில் இயங்கி வருகிறது.

M/s. Water Life India நிறுவனம் வழங்கியுள்ள விருப்ப (EOI) கருத்துரு ஒப்பிட்டு கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பணி உத்திரவு வழங்கலாம்.

1. கார்ப்ரேட் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட CSR நிதியில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து கொள்ள வேண்டும். மேலும் அதன் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி அந்நிறுவனமே மேற்கொள்ள வேண்டும்.

2. மாதாந்திர மின்சார கட்டணம் அந்நிறுவனமே செலுத்தப்பட வேண்டும்.
3. குடிநீர் தரத்தை உறுதி செய்து மக்களுக்கு விநியோகம் செய்ய வேண்டும்.
4. இத்திட்டத்தின் மூலம் பயன்பெறும் பயனாளிகளுக்கு E-Cards அந்நிறுவனமே வழங்கி பராமரிக்க வேண்டும்.
5. 20 லிட்டர் Can ரூ.7.00 என விநியோகிக்கும் போது கேன் ஒன்றுக்கு ரூ.1.00 நகராட்சிக்கு கட்டணமாக செலுத்த வேண்டும்.
6. திட்டம் செயல்படுத்திய 10 ஆண்டுகளக்கு பின்பு குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தை நல்ல முறையில் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட வேண்டும்.
7. நிறுவனம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க ஒதுக்கீடு செய்த இடத்திற்கு எவ்வித முன்னுரிமையும் கோர இயலாது.
8. திட்டம் செயல்படுத்தும் போது பொது மக்களிடமிருந்து புகார்கள் பெறப்பட்டால் இத்திட்டத்தை இரத்து செய்ய மறைமலைநகர் நகராட்சி ஆணையருக்கு முழு அதிகாரம் உண்டு.
9. பொது மக்களுக்கு மட்டுமே இத்திட்டத்தின் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட வேண்டும். தொழிற்சாலைகள் மற்றும் உணவு விடுதிகளுக்க குடிநீர்விநியோகம் செய்ய கூடாது.

மேற்கண்ட நிபந்தனைகளின்படி M/s. Water Life India என்ற நிறுவனம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் இந்நகராட்சியில் வார்டு எண்.13 திருக்கச்சூர் TNHB குடிநீர் நீரேற்று நிலையம் பகுதியில் M/s. Water Life India என்ற நிறுவனத்தால் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்துக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகரமன்ற தீர்மான எண்.257 நாள்.06.02.2018**
**அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.**

**ஒம்/—ப.மு.நெ.முஜிபுர் ரஹ்மான்**
**ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்**
**மறைமலைநகர் நகராட்சி**

**//உண்மை நகல்//**

**மேலாளர்**
**மறைமலைநகர் நகராட்சி**

# மறைமலைநகர் நகராட்சி

**மறைமலைநகர் நகராட்சியில் 06.02.2018 செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்ற நகர் மன்ற சாதாரணக் கூட்டத்தின் தீர்மான விவரம்.**

## பொருள் எண்.5

மறைமலைநகர் நகராட்சி வார்டு எண்.1 வல்லாஞ்சேரி கிராமம் நில அளவை எண்.67/5 –ல் திரையரங்கம் அமைத்திட தடையில்லா சான்று வழங்குவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர், காஞ்சிபுரம் அவர்களின் கடித ந.க.எண்.2846/2016/எம்.1 நாள்.20.09.2017 கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், மேற்படி இடத்தில் நிரந்திர திரையங்கு அமைக்க தடையின்மை சான்று வழங்கிட மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மாவட்ட ஆட்சித் தலைவர், காஞ்சிபுரம் அவர்களால் தடையின்மை சான்று வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.228/2018/அ1**

**நகரமன்ற தீர்மான எண்.258 நாள்.06.02.2018**
**அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.**

**ஒம்/–ப.மு.நெ.முஜிபுர் ரஹ்மான்**
**ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்**
**மறைமலைநகர் நகராட்சி**

**//உண்மை நகல்//**

**ஆணையாளர்**
**மறைமலைநகர் நகராட்சி**